# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,284. DECEMBER 23. 1908.

## TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[By-laws framed by the Local Board of Gampola.]

1898 ம் ஆண்டு 13 ம் நொம்பர் 56 ம் பிரிவின் 21 ம் பகுதி கட்டளைச்சட்டத்தின்படி, கிடங்குபொருந்திய மலங்கழிகூடம் விலக்கி அதனிடமாக வாழிவைக்கும் மலக்கூடம் நியமித்தலையும் அதைத் திட்டப்பண்ணுவதையும்பற்றியது.

சீர்திருத்தலின் சபைக்கு கிடங்கு பொருந்திய மலங்கழிகூடங்களை விலக்கவும் அவைக்குப்பதிலாக வாளிவைக்கும் முறைமை நியமிக்கவும் கூடும்.

1. கம்பளை சுகாதாரசங்கத்து அக்கிராசனுதிபதியவர்களுக்கு மேற்படி சபையின் தீர்மானத்தைக்கொண்டு தத்துவமளிக்கப்படும்போது யாதாமொருவனுடைய இடத்தில் வீட்டில் அல்லது கட்டிடத்திலுள்ள கிடங்குபொருந்திய மலக்கூடத்தை மூடிப்போடவும் அதற்குபதிலாக வாளிவைக்கப்பட்டதொன்றை நியமிக்கவும் வேண்டியிருக்கும்போது அதனைப்பற்றி மேற்குறித்த விடங்களில் குடியிருப்பவனிடம் அல்லது அவ்விடங்களையுள்ளவனிடம் எழுதப்பட்ட வோர அறிக்கையால் கேட்டுக்கொள்வதற்கு அக்கிராசனுதிபதியவர்களுக்கு அதிகாரமுண்டு.

பிரசைகளைச்சேர்ந்த விடங்களில் மலம் புதைப்பதற்கு உத்தரவு வேண்டும்.

2. யாதாமொரு கிரகஸ்தன் தன் வீடுகளின் மலம் தன் வளவியேயே புதைக்க அல்லது மூடிப்போட வேண்டில் அப்படிச் செய்துகொள்வதற்காக உத்தரவு எழுதப்பட்ட ஓர் எழுத்தைக்கொண்டு கம்பளை சுகாதாரசங்கத்துக்கு அக்கிராசனுதிபதியவர்களால் கொடுக்கப்படும்.

மலம் களஞ்சியத்துக்குக் கொண்டுபோதல்.

3. கம்பளை சுகாதாரசங்கத்து அக்கிராசனுதிபதியவர்களிடம் 2 ம் துணைச்சட்டத்தின்படி விசேஷமான வோர் உத்தரவுபெற்றுக்கொள்ளாத சகலரும் மேற்படி சபையால் நியமிக்கிற வோர் மலம் களஞ்சியத்திற்கு நாள்தோறும் தங்கள் வீடுகளைச்சேர்ந்த வாழிவைக்கும் மலம் கழி கூடத்திலுள்ள மலத்தைப் போடுவிக்கவேண்டும்.

மலம் எடுத்துப்போடுகிறவர்கள் தங்கள் பெயரை சபைக்கந்தோரில் பதிவுபண்ணிக்கொள்ளவேண்டும்.

4. 2 ம் துணைச்சட்டத்தின் பிரகாரம் எழுதப்பட்ட வோருத்தரவு இல்லாத யாதாமோர் கிரகஸ்தன் இஷ்டத்தின்படி ஒருவனை மலமெடுத்துப்போடும்படி வைத்துக்கொள்ளலாம்; ஆனாலும் இவ்விஷயத்தில் அப்பேர்ப்பட்ட விசேஷ ஒழுங்கைப்பற்றிய செய்தியும் அவ்வேலைக்கு அமர்த்திக்கொண்டவனுடைய நாமமும் அச்சபைக்கந்தோரில் எழுதிப் பதிவுபண்ணிக்கொள்வதும் தவிர, மேற்படி மலம் கொட்டுமிடத்தையும் அவ்விடம் அதைக்கொண்டுபோகும் விதத்தையும் சபையால் அங்கீகரித்துக்கொள்ளும்பொருட்டு காண்பிக்கப்படவேண்டும்.

மலம் புதைப்பதற்கு யாதாமோர் இடத்தைப் பாவிக்க தத்துவமளிக்கும் உத்தரவு ஒருவருக்கு கொடாதிருக்கவும் கம்பளை சுகதார சபை அக்கிராசனுதிபதியவர்களுக்குக்கூடும்.

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

No. 533, N. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1908 ம் ஞு மார்கழி 12 ந் உ.

1909 ம் ஆண்டு மாசிமாதம் 9 ந் தேதி, செவ்வாய்க்கிழமை காலமே 11 மணியளவில் தன் ஆபிசில் வட மாகாணத்து கவர்ன்மேந்து ஏசென்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் விற்கப்படும் அல்லது உரித்து முடிவுபண்ணப்படும்.

12 காணித்துண்டுகள், வட மாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் யாழ்ப்பாணம் பச்சிலைப்பளி முதலிய பகுதிகளிலிருக்கின்றது.

உரித்தாளி—அரசாட்சி.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | காணிப் பெயர். | விபரம். | விசாலம். ஏ. ரூ. ப. | தீர்ப்புவிலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|
| 12991 | மாசார் | மாசார்குளம் | நெல்வயலுக்குந்தக்க | 3 1 25 | 15 |
| 12992 | டிஷ். | டிஷ். | டிஷ். | 3 1 29 | 15 |
| 12993 | டிஷ். | டிஷ். | — | 3 0 36 | 15 |
| | டிஷ். | டிஷ். | வல்லிபுரம் மகள் சின்னம்மா கூட்டிச்சேர்த்தது | 0 2 8 | 15 |
| | டிஷ். | டிஷ். | வல்லிபுரம் பெண் வேலாசி கூட்டிச்சேர்த்தது | 0 0 27 | 15 |
| | டிஷ். | டிஷ். | ஈ. சின்னத்தம்பி கூட்டிச்சேர்த்தது | 0 0 16 | 15 |
| | டிஷ். | டிஷ். | சின்னப்பிள்ளை பெண் மீனாட்சி கூட்டிச்சேர்த்தது | 0 0 20 | 15 |

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | காணிப் பெயர் | விபரம். | விசாலம். ஏ. று. ப. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|
| | | | பிளான் இலக்கம் 3,320. | | |
| 12259 | கரையூர் | சந்திரவன்தறை | பாச்சவலைக் கரைத்தெருவிலிருந்து தெற்குபாக மாய்ப்போகும் பாவிப்பில்லாத ஒழுங்கை | 0 0 6 | 4,800 |
| 12260 | டிை. | டிை. | டிை. | 0 0 2·75 | 4,800 |
| 12261 | டிை. | டிை. | டிை. | 0 0 4 | 4,800 |
| 12262 | டிை. | டிை. | டிை. | 0 0 5 | 4,800 |
| 12263 | டிை. | டிை. | டிை. | 0 0 6 | 4,800 |

இக்காணிகளைப்பற்றிய வேறே காரியங்கள் அறியவேணுமாகில் கவண்மேந்து ஏசன்றரிடமும், படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரையிடமும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமர் அவர்களின் கட்டளைப்படி,

எச். எல். கிருவ்வோட்,
... இராசாங்க விகிதர்.

---

No. 534, N. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1908 ம் ஹூ டிசெம்பர்மீ 21 ந் உ.

1909 ம் ஆண்டு மாசிமீ 16 ந் தேதியாகிய செவ்வாய்க்கிழமை காலமே 11 மணியளவில் தன் ஆபிசில் வட மாகாணத்து கவர்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப் பிரகாரம், விற்கப்படும் அல்லது உரித்துமுடிவுபண்ணப்படும்.

7 காணித்துண்டுகள், வட மாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் வலிகாமம் கிழக்கு, பச்சிலைப்பளி, தீவு, வடமருட்சி மேற்கு முதலிய பகுதிகளிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 3,496. உரித்தாளி—அரசாட்சி.

கேள்விக்காரன்—ஜெ. எம. வேலுப்பிள்ளை.

| காணித்துண்டின் இல, | குறிச்சி. | காணிப் பெயர். | விபரம். | விசாலம். அ. று. ப. | பாணிப்பு விலை அக்கரொன்றுக்கு. ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 13087 | கோப்பாய் | அம்பிறுவத்தை, கொட்பிலவத்தை | கட்டிடத்துக்கும் பனைசெய்கைக்கும்தக்க பழைய ஒழுங்கை | 0 1 11 | 240 0 |
| | | | பிளான் இலக்கம் 3,466. உரித்தாளி—அரசாட்சி. கேள்விக்காரன்—மெஸ். ஏ. கதிரவேலு பிற்க்ரர். | | |
| 12920 | புலோப்பளை | இறதாலைக்காடு | தென்னைச்செய்கைக்குத்தக்க மணல்தறை | 18 0 0 | 16 50 |
| | | | ஒமிக்குப்பணம் கட்டத்தவறின நிலங்கள். | | |
| | | | பிளான் இலக்கம 2,971. உரித்தாளி—அரசாட்சி. | | |
| 11002 | கரம்பன் | தனவில், உயரத்தனவில், பொற்றன்தனவில் | நாரந்தனை வயித்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை வாங்கி இரண்டாம் ஒமிக்குப்பணம் கட்டத்தவறின நிலம் | 3 2 14 | 15 0 |
| 11000 | டிை. | டிை. | டிை. | 1 2 4 | 15 0 |
| 10991 | டிை. | டிை. | டிை. | 0 2 26 | 15 0 |
| | | | பிளான் இலக்கம 146. உரித்தாளி—அரசாட்சி. | | |
| 0 | இயக்கச்சி | குறிஞ்சாப்பள்ளவயல் | நல்லூர் கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை வாங்கி இரண்டாம் ஒமிக்குப்பணம் கட்டத்தவறின நிலம் | 4 1 4 | 15 0 |
| | | | பிளான் இலக்கம 3,447. உரித்தாளி—அரசாட்சி. | | |
| 12326 | கரவெட்டி | தம்பிஓடை | கரவெட்டி சிதம்பரப்பிள்ளை செல்லப்பா வாங்கி இரண்டாம் ஒமிக்குப்பணம் கட்டத்தவறின நிலம் | 0 0 4 | 200 0 |

இக்காணிகளைப்பற்றிய வேறே காரியங்கள் அறியவேணுமாகில் வடமாகாணத்து ஏசன்றரிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரையிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

உத்தமனர் அவர்களினது கட்டளையின்படி,

எச். எல். கிருவ்வோட்,
எக்டிங் இராசாங்க விகிதர்.

---

No. 1,175, E. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1908 ம் ஹூ டிசெம்பர்மீ 17 ந் உ.

1909 ம் ஆண்டு மாசிமீ 18 ந் தேதியாகிய வியாழக்கிழமை முற்பகல் கிழக்கு மாகாணத்து கவர்ணமேந்து ஏசன்றவர்கள் தனது ஆபிசில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற வாயிதா கொள்விலை கட்டத்தவறிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற் கூறி விற்பார்.

காணித்துண்டுகள், கிழக்கு மாகாணத்து மட்டக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கின்றது.

படத்து தொம்பர் 3,274. எருவூர்பற்று.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | வாயிதாக்கட்டாதவனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. று. பே. | தரிப்புவிலை ஏக்கரொன்... |
|---|---|---|---|---|---|
| 89754 & 89755 | கொமோமடு | க. தோ. வேலுப்பிள்ளை | வேளாண்மைப்பூமி | 4 0 36 | |
| | | படத்து நொம்பர் 2,706. | | | |
| 77758 | தும்பாலஞ்சோலை | இ. அகமதுலெவ்வை | வேளாண்மைப்பூமி | 9 2 28 | |

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | வாயிதாகட்டாதவனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. ரூ. பே. | தரிப்பு விலைக்கொள் தொகை. ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| | | படத்து நொம்பர் 3,641. கோறளைப்பற்று. | | | |
| 93120 | இலங்குப்பளச்சேனை அல்லது அந்தியவட்டவான | அ. முகைமதீன்லாவா | வேளாண்மைப்பூமி | 0 3 34 | 15 0 |
| | | படத்து நொம்பர் 592. மண்முனைப்பற்று. | | | |
| 6414 | சேந்துக்குடா | ஒரு. நி. சேதுகாவலர் | வேளாண்மைப்பூமி | 7 1 12 | 15 0 |
| | | படத்து நொம்பர் 3,353. | | | |
| 90418 | வம்மியடிஊற்று | வே. கறுவல் | வேளாண்மைப்பூமி | 1 3 26 | 15 0 |
| | | படத்து நொம்பர் 3,446. | | | |
| 92118, 92120 & 92122 | வலைஇறவு | ஒரு நி. சேதுகாவலர் | வேளாண்மைப்பூமி | 17 1 2 | 15 0 |
| | | படத்து நொம்பர் 3,199. போரதீவுப்பற்று. | | | |
| 88762 | இறக்கததுவட்டை | கோ. சி. ஐ. சின்னத்தம்பியும் மறுபேரும் | வேளாண்மைப்பூமி | 6 3 21 | 15 0 |
| | | படத்து நொம்பர் 3,350. | | | |
| 90413 | வெல்லாவெளி | க. சின்னத்தம்பியும் மறுபேரும் | வேளாண்மைப்பூமி | 7 2 0 | 15 0 |
| | | படத்து நொம்பர் 3,439. | | | |
| 92094 | போரதீவு | கா. வீரக்குட்டி | ஷை. | 9 1 26 | 15 0 |
| 92095 | ஷை. | கா. கணபதி | ஷை. | 2 1 20 | 15 0 |
| 92097 | ஷை. | கா. வீரக்குட்டி | ஷை. | 0 1 30 | 15 0 |
| | | படத்து நொம்பர் 1,558. சம்மாந்துறைப்பற்று. | | | |
| 4223 | சம்மாந்துறை | மீ. அகமதுலெவ்வை | வேளாண்மைப்பூமி | 6 3 32 | 15 0 |
| | | படத்து நொம்பர் 3,257. | | | |
| 89685 | சவளக்கடை | செ. முன்டப்போடியு மறுபேரும் | ஷை. | 13 3 4 | 200 0 |
| | | படத்து நொம்பர் 3,347. | | | |
| 90402 | ஷை. | சி. ஆறுமுகம் | ஷை. | 11 3 10 | 15 0 |
| 90404 | ஷை. | மீ. முகம்மதலிவா | ஷை. | 7 3 6 | 15 0 |
| | | படத்து நொம்பர் 3,435. | | | |
| 92084 | சொறிகல்முனை | க. சின்னத்தம்பி | ஷை. | 9 2 13 | 15 0 |
| | | படத்து நொம்பர் 2,921. நாடுகாடுப்பற்று. | | | |
| 87439 & 87440 | இறக்காமம் | ஆ. உமறுகத்தாப்போடி | ஷை. | 4 2 2 | 30 0 |
| | | படத்து நொம்பர் 3,304. அக்கரைப்பற்று. | | | |
| 89923 | பனங்காடு | ஆ. காசின்வாவா | வேளாண்மைப்பூமி | 27 2 24 | 15 0 |
| | | படத்து நொம்பர் 2. | | | |
| 875 | திருக்கோவில் | வ. சபாபதிப்பிள்ளை | வேளாண்மைப்பூமி | 4 0 26 | 15 0 |
| | | படத்து நொம்பர் 3,832. விந்தனைப்பற்று. | | | |
| 93782 | கொட்டிகாவெல | வா. மு. அப்புகாமி ஆராச்சி | தோட்டப்பூமி | 1 0 31 | 15 0 |
| | | படத்து நொம்பர் 3,872. | | | |
| 93921 | பூலாவெளி | ச. மு. குணவர்தன வண்டா | தோட்டப்பூமி | 2 3 10 | 15 0 |
| | | படத்து நொம்பர் 3,892. கோறளைப்பற்று. | | | |
| 93972 | பேத்தாளை | ஆ. சின்னத்தம்பி | தோட்டப்பூமி | 2 1 34 | 15 0 |
| 93974 | ஷை. | ப. கந்தன் | ஷை. | 0 0 22 | 15 0 |
| | | படத்து நொம்பர் 3,875. மண்முனைப்பற்று. | | | |
| 93924 | விளாவட்டவான் | ஆ. மார்கண்டு | தோட்டப்பூமி | 3 2 10 | 15 0 |
| | | படத்து நொம்பர் 3,797. கரைவாகுப்பற்று | | | |
| 93682 | காரைதீவு | வீ. சினித்தம்பியும் மறுபேரும் | தோட்டப்பூமி | 0 3 4 | 30 0 |
| | | படத்து நொம்பர் 3,916. நிந்தவூர்பற்று. | | | |
| 94030 | நிந்தவூர் | ஆ. அகமதுலெவ்வையும் மறுபேரும் | தோட்டப்பூமி | 5 1 28 | 15 0 |
| | | படத்து நொம்பர் 3,885. சம்மாந்துறைப்பற்று. | | | |
| 93949 | சொறிக்கல்முனை | ம. பிலிப்பு | தோட்டப்பூமி | 1 1 31 | 15 0 |
| 93951 | ஷை. | அ. நீக்கிலானும் மறுபேரும் | ஷை. | 1 1 34 | 15 0 |
| | | படத்து நொம்பர் 3,640. பாணமைப்பற்று. | | | |
| 93112 | பொத்துவில் | மீ. ஆதம்வாவாவு மறுபேரும் | தோட்டப்பூமி | 1 0 2 | 15 0 |
| 93113 | ஷை. | மீ. அவுவக்கர் | ஷை. | 1 0 32 | 15 0 |
| 93115 | ஷை. | மீ. ஆதம்வாவாவும் மறுபேரும் | ஷை. | 1 0 30 | 15 0 |
| | | படத்து நொம்பர் 2,691. | | | |
| 77459 | ஷை. | அ. ம. அகமது | ஷை. | 0 3 13 | 15 0 |
| | | படத்து நொம்பர் 2,696. | | | |
| 77737 | ஷை. | ரு. காசின்வாவா | ஷை. | 1 0 8 | 15 0 |
| | | படத்து நொம்பர் 2,691. | | | |
| 77505 | ஷை. | அ. மு. இபுருசிம் | ஷை. | 0 2 20 | 15 0 |
| | | படத்து நொம்பர் 3,941. | | | |
| 94156 | ஷை. | செ. இராசையாவு மறுபேரும் | ஷை. | 1 0 6 | 18 0 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் கொந்திசுகளைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏஜென்றத்துரையவர்களிடமும் விளுவ் அறிந்துகொள்ளலாம்.

உத்தமராவர்களினது கட்டளைப்படி,
எச். எல். கிருவ்வேர்ட்,
ஏக்டிங் இராசாங்க லிகிதர்.

No. 1,930, N.W. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1908 ம ஞு டிசெம்பர் மீ 21 ந் உ.

1909 ம ஆண்டு மாசிமீ 26 ந் தேதி, வெள்ளிக்கிழமை, பகல் 1 மணியளவில், தன் ஆபிசில் வடமேன் மாகாணத்து புத்தளம உதவி கவண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும பொருத்தப்பிரகார ஏலத்திற் கூறி விற்க அல்லது முடிவுகட்டப்படும.

34 காணித்துண்டுகள், வடமேன் மாகாணத்து புத்தளம் டிஸதிறிக்கின் புத்தளம்பற்று பகுதியிலும் தெமலஹத்பத்து பகுதிகளிலுமிருக்கின்றன.

அக்கரைப்பற்று தெற்கு.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம் ஏ. | ரூ. | பெ. | ஏக்கரொன்றுக்கு தக்சரிப்புவிலை ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் 3,225. குறிச்சி—நாவக்காடு. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 14516 | மினிகிரிச்சிகாடு | மனுவேல் பதித்திறு | காடு | 5 | 2 | 10 | 17 | 50 |
| | பிளான் இலக்கம் 1,724. குறிச்சி—தழுவை. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 8768 | தனுவைகாடு | — | பத்தைக்காடு | 7 | 2 | 34 | 20 | 0 |
| | பிளான் இலக்கம் 3,691. குறிச்சி—பெரியஒத்தப்பனை. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 16167 | நாயக்கனைத்தோட்டம | — | பி. எஸ். மெந்திஸ் பிடித்துண்டு பண்ணியிருக்கும் மூன்று வருட தென்னஞ்செய்கை | 14 | 2 | 18 | 175 | 0 |
| 16168 | ஷெ | — | பி. ஸ். மெந்திஸ் பிடித்துண்டு பண்ணியிருக்கும் ஐந்தாறு வருட தென்னஞ்செய்கை | 7 | 0 | 12 | 275 | 0 |
| | ராஜகுமாரவன்னிபற்று. | | | | | | | |
| | பிளான் இலக்கம் 3,648. குறிச்சி—புளிவிட்டியை. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 16087 | புளிவிட்டியைகெலே | ஆர். எம். ருயசிரியாமி | பாலை முதிரை படங்கிய மூக்கலானை | 4 | 2 | 0 | 35 | 0 |
| 16088 | ஷெ | ஷெ | பழையசேனை | 0 | 1 | 18 | 15 | 0 |
| 16089 | ஷெ | றேட்டுக்குவிட்டிருக்கும் சேடம் | — | 0 | 1 | 29 | —* | |
| 16090 | ஷெ | அவுசதை கப்புறுவாமி | பழையசேனை | 0 | 2 | 24 | 15 | 0 |
| | பள்ளம்பற்று. | | | | | | | |
| | பிளான் இலக்கம் 3,190. குறிச்சி—இயலை மண்டலானை. உரித்தாளி—முடி. | | | | | | | |
| K 1241 | தமிலைகாவத்தை | — | எச். பி. பீரிஸ் பிடித்துண்டு பண்ணியிருக்கு தென்னஞ் செய்கை | 0 | 1 | 32 | 100 | 0 |
| K 1241½ | ஷெ | — | ஷெ | 0 | 0 | 8 | 100 | 0 |
| R 1241 | கோங்காவத்தகெலே | — | சேனை | 6 | 3 | 20 | 100 | 0 |
| S 1241 | கோங்காவத்தயேளை | — | சேனை | 6 | 1 | 14 | 75 | 0 |
| | பிளான் இலக்கம் 3,549. குறிச்சி—உவம்பிட்டியை. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 5½ | தமுனுகாயேளை | — | முனசிங்க பிடித்துண்டுபண்ணியிருக்குஞ் தென்னஞ் செய்கை | 0 | 0 | 10 | 100 | 0 |
| | பிளான் இலக்கம் 3,360. குறிச்சி—புளியங்குழம். உரித்தாளி—முடி. | | | | | | | |
| 14895 | கோங்காயேளை | நம்பிருலை விதானை | மூக்களானை | 1 | 1 | 10 | 45 | 0 |
| | பிளான் இலக்கம் 3,661. குறிச்சி—நெவடவை. உரித்தாளி—எழிவிட்டியை அப்புகாமி வெல்விதானை. | | | | | | | |
| 16116 | எலம்பகாவத்தை | எழிவிட்டியை அப்புகாமி வெல்விதானை | ஒன்றிலிருந்து 12 வயது மட்டான தென்னஞ்செய்கை | 6 | 1 | 6 | 200 | 0 |
| 16117 | எலம்பகாயேளை | ஷெ | பத்தைக்காடு | 0 | 1 | 6 | 100 | 0 |
| | கிறிமெட்டியாபற்று. | | | | | | | |
| | பிளான் இலக்கம் 3,174. குறிச்சி—ஹல்மில்லேவையும் குருகெட்டியாவையும். உரித்தாளி—முடி. | | | | | | | |
| 14407 | பனுகாயேளை | கே. குமரப்பு | வயல் | 6 | 1 | 36 | 20 | 0 |
| 14408 | ஷெ | ஷெ | காடு | 6 | 2 | 3 | 22 | 50 |
| 14409 | தங்காகெலே | கிரியாகேபூலா | ஷெ | 1 | 2 | 3 | 25 | 0 |
| 14410 | ஷெ | அப்புவாகைசுத்தா | ஷெ | 1 | 2 | 15 | 25 | 0 |
| 14411 | ஷெ | எஸ். வமயா | ஷெ | 1 | 1 | 33 | 25 | 0 |
| 14412 | ஷெ | எஸ். சம்மதரா | ஷெ | 1 | 2 | 30 | 25 | 0 |
| | பிளான் இலக்கம் 3,178. குறிச்சி—தெமட்டாவை. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 14419 | தெமட்டாவைகும்புற | டி. புஞ்சிறுலை | வயல் | 4 | 3 | 28 | 30 | 0 |
| | பெருவிளிப்பற்று. | | | | | | | |
| | பிளான் இலக்கம் 3,304. குறிச்சி—முக்காளியை. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 14718 | அந்தரகாகெலே | புஞ்சிறுலை | மூக்கலானை | 1 | 1 | 18 | 35 | 0 |
| 14719 | திவுல்காவந்த | காதர்தம்பி மொம்சாஸிவு மற்றவர் | ஷெ | 5 | 1 | 8 | 35 | 0 |
| 14720 | தங்காலந்தை | டிக்கிறுலைகே புஞ்சா | ஷெ | 4 | 2 | 20 | 35 | 0 |
| | கறம்பாபற்று. | | | | | | | |
| | பிளான் இலக்கம் 3,343. குறிச்சி—பூலந்தியாவை. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 14862 | கறுவலகாயேளை | — | சேனை | 1 | 3 | 27 | 15 | 0 |
| | பாண்டிதாபற்று. | | | | | | | |
| | பிளான் இலக்கம் 2,618. குறிச்சி—தெட்டானை. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 11816 | முத்தெட்டுவேகும்புற | — | வயல் | 1 | 1 | 20 | 40 | 0 |
| | பிளான் இலக்கம் 1,711. குறிச்சி—புதுவெள்ளியை. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 8644 | புதுவெள்ளியஹேன்வாய | — | மூக்கலானை | 70 | 2 | 3[illegible] | 20 | 0† |
| 8646 | புதுவெள்ளியமூக்கலான | — | ஷெ | 105 | 0 | [illegible] | 25 | 0† |

* விற்கப்படமாட்டாது.

† இவைகள் புத்தளத்திலிருந்து குருநாக்கலுக்கு போகும் றேட்டில் 13 ம் கட்டைக்கு இரண்டு கட்டையளவுக்கு [illegible]கின்றன. இவைகள் வடத்தை ஆண்டிகாமம் றேட்டுக்கும் சமீபமாம்.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. அ. பே. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 8648 | புதுவெள்ளியகும்புர | — | மூக்கலானை | 25 2 1 | 20 0* |
| 8651 | டிஷ | — | டிஷ | 33 0 17 | 20 0* |
| 8654 | புதுவெள்ளியேஹேலயாய | — | டிஷ | 105 2 20 | 20 0* |
| 8658 | டிஷ | — | டிஷ | 14 3 11 | 20 0* |

* இவைகள் புத்தளத்திலிருந்து குருநாகலைக்கு போகும் றோட்டில் 13 ம் கட்டைக்கு இரண்டு கட்டைமேற்கிலிருக்கின்றன. இவைகள் வடத்தை ஆண்டிகாமம் றோட்டுக்கும் சமீபம்.

இந்தக்காணிகளைப்பற்றி மேலதிகமான விபரங்களை புத்தளம் கொவர்ண்மேந்து உதவி ஏஜன்றவர்களிடமும் அவைகளின் பிளான்களைப்பற்றி சருவையர் ஜனறுலவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

உத்தமதேசாதிபதியவர்களின் கட்டளைப்படி,

எச். எல். கிறுவ்வோட்,
ஏ ம ஸ் ஓராசாங்க லிகிதர்.

## LAND ACQUISITION NOTICES.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Kandy, Kandy District.]

1876 ம் ஆல-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பட்டணத்தின் நயத்துக்காக என்னும் மகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 5,816. குறிச்சி—கண்டிப்பட்டணம்.

| காணித்துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. அ. பே |
|---|---|---|---|---|
| N 908 | உடவத்தைக்கெலே | சேனை | இ. பெவன் அவர்கள் | 3 0 6·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆல-த்து காணி எடுத்துகொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்கு கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1909 ம் ஆல தைமாசம் 22 ந் தேதியிலன்று 1 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1908 ம் ஆல மார்கழி 19 ந் உ.

ஜெ. பி. லூவிஸ்,
அரசாட்சி ஏசண்டு.

---

[Tenders for the Civil Medical Department.]

1909 ம் ஆண்டில் கண்டி றெயில் ஸ்றேஷனிலிருந்து இதன் பின்னுல் சொல்லப்பட்டிருக்கும் ஆசுப்பத்திரிகள் மருந்துச்சாலைகளுக்கு பெட்டிகளில் மருந்துகளும் கடுதாசி இன்னும் பலசாமான்களும் ஏற்றிக்கொண்டுபோய்க் கொடுப்பதற்காக ஒப்பந்தஞ்செய்யப் பிரியப்படுவோர்களிடமிருந்து 1908 ம் ஆல மார்கழி 29 ந் தேதி செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணி வரைக்கும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் அனுப்பும் உறையின்மேல் "சாமான்கள் ஏற்றுக்கொண்டுபோய்க் கொடுப்பதற்காக ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுத வேண்டும்.

| இடங்களின் பெயர். | | கண்டிய றெயில் ஸ்றேஷனிலிருந்து உள்ள தூரம். மைல். |
|---|---|---|
| டெல்தோட்டை | ... | ... 23 |
| கலகதறை | ... | ... 11½ |
| கங்குருங்கட்டை | ... | ... 17 |
| கண்டி ஆசுப்பத்திரி | ... | ... ¾ |
| கண்டி மருந்துச்சாலை | ... | ... ⅓ |
| மாடுகொடை | ... | ... 29 |
| மத்துறட்டா | ... | ... 29 |
| மலகலகெளி | ... | ... 38 |
| நிலதண்டகெனு | ... | ... 43 |
| படியபெலாலா | ... | ... 26 |
| நவ்ளாலை | ... | ... 28 |
| தெல்தெனியா | ... | ... 15½ |
| கெலிஓயாக்கை | ... | ... — |

2. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொட்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும், அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி யனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடமிருந்து அல்லது அந்த அந்த மெடிக்கல் ஆபீசரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா.

5. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் ஒவ்வொருவரும் ரூபாய் 25 முற்பணத்தைத் திறைசேரியில் அல்லது கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதி யனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தந்த பிணை கொடுக்கத்தவறினுல், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். கொந்திருத்து ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

6. கொந்திருத்த எற்றகாலம், ஒப்பந்தம் சரியாய் நடைபெறுதற்குப் பிணையாய் வருவோமென்று இரண்டு போதிய ஆட்கள் எழுதிக் கையொப்பமிட்ட ஒரு தபால் ஒவ்வொரு கேள்விக் கடுதாசியுடனும் அனுப்பவேண்டும். இந்த இரண்டு பேருடைய மேல்விலாசமும் அந்தத் தபாலிற் காட்டவேண்டும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் கொந்திருத்தைச் சரியாய் நடப்பிக்கிறதற்காக பணப்பிணை ரூபா 100 கொடுக்கவேண்டும். இந்தப் பணப்பிணை கொந்திருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று அறிவித்த பதினாலு நாட்களுக்குள் கொடுத்துப்போடவேண்டும்.

8. ஆராகுதல் கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தில் பிழைகள் திருத்தினால் அப்பிழைத்திருத்தங்கள் கேள்விப்பத்திரக்காரனின் கையொப்பம் பெற்றிருக்கவேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரம் சரியல்லதென்று தள்ளப்படும்.

9. இதைக்குறித்து இன்னும் விவரங்கள் அறியவேண்டியதானால் கண்டி பெரிய டாக்குத்தரிடம் அறிந்துகொள்ளலாம்.

10. ஒப்பந்தக் கேள்விகளில் ஒன்றை அல்லது முழுமையையும் தள்ளும் உரித்தை வைத்திருப்பதுமல்லாமல், அவைகளில் ஏதாகுதல் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கொவர்ணமேந்தாருக்கு உண்டு.

(கையொப்பம்) ஜி. றி. கிறிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1908 ம் ஞு மார்கழி 15 ந் உ.

---

[Tenders for the Civil Medical Department.]

1909 ம் ஆண்டில் மாத்தளை றெயில்வே ஸ்டேஷனிலிருந்து இதன் பின்னால் சொல்லப்பட்டிருக்கும் ஆசுப்பத்திரிகள் மருந்துச்சாலைகளுக்கு பெட்டிகளில் மருந்துகளும் கடுதாசி இன்னும் பல சாமான்களும் ஏற்றிக்கொண்டுபோய்க் கொடுப்பதற்காக ஒப்பந்தம்செய்யப் பிரியப்படுவோர்களிடமிருந்து 1908 ம் ஆ மார்கழிமாதம் 29 ந் தேதி செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணி வரைக்கும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் அனுப்பும் உறையின் மேல் "சாமான்கள் ஏற்றிக்கொண்டுபோய்க் கொடுப்பதற்காக ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதவேண்டும்.

| இடங்களின் பெயர். | | கிட்டிய றெயில் ஸ்டேசனிலிருந்துஉள்ள தூரம். மைல். |
|---|---|---|
| அழுவிகாரை | ... ... | 3 |
| காட்டுத்தம்பளை | ... ... | 29 |
| களவ்ளை | ... ... | 39 |
| கம்மடுவ | ... ... | 14 |
| கோங்காவலை | ... ... | 23 |
| மாத்தளை ஆசுப்பத்திரி | ... ... | ½ |
| மௌசகிரியா | ... ... | 17 |
| நாவுந்தை | ... ... | 14 |
| பாலதெனியா | ... ... | 11 |
| றத்தோட்டை | ... ... | 7 |

2. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காகவைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும், அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக்கேள்விகள் எழுதியனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா.

5. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம்பெற விரும்புவோர் ஒவ்வொருவரும் ரூபா 25 முற்பணத்தை திறைசேரியில் அல்லது கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக்கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்க பிணைகொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். கொந்திருத்து ஒப்பந்தம் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல் ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

6. கொந்திருத்து ஏற்றகாலம், ஒப்பந்தம் சரியாய் நடைபெறுவதற்குப் பிணையாய் வருவோமென்று இரண்டு போதிய ஆட்கள் எழுதிக் கையொப்பமிட்ட ஒரு தபால் ஒவ்வொரு கேள்விக்கடுதாசியுடனும் அனுப்ப வேண்டும். இந்த இரண்டு பேருடைய மேல்விலாசமும் அந்தத் தபாலிற் காட்டவேண்டும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் கொந்திருத்தைச் சரியாய் நடப்பிக்கிறதற்காக பணப்பிணை ரூபாய் 100 கொடுக்கவேண்டும். இந்தப் பணப்பிணை கொந்திருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று அறிவித்த பதினாலு நாட்களுக்குள் கொடுத்துப்போடவேண்டும்.

8. ஆராகுதல் கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தில் பிழைகள் திருத்தினால் அப்பிழைத்திருத்தங்கள் கேள்விப்பத்திரக்காரனின் கையொப்பம் பெற்றிருக்கவேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரம் சரியல்லதென்று தள்ளப்படும்.

9. இதைக்குறித்து இன்னும் விவரங்கள் அறியவேண்டியதானால், கண்டி பெரிய டாக்குத்தரிடம் அறிந்துகொள்ளலாம்.

10. ஒப்பந்தக்கேள்விகளில் ஒன்றை அல்லது முழுமையையும் தள்ளும் உரித்தை வைத்திருப்பதுமல்லாமல், அவைகளில் ஏதாகுதல் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கொவர்ணமேந்தாருக்கு உண்டு.

(கையொப்பம்) ஜி. றீ. கிறிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1908 ம் ஆ மார்கழி 15 ந் உ.

---

[Tenders for the Civil Medical Department.]

1909 ம் ஆண்டில் யாழ்ப்பாணம் றெயில் ஸ்டேஷனிலிருந்து இதன் பின்னூற் சொல்லப்பட்டிருக்கும் ஆசுப்பத்திரிகள் மருந்துச்சாலைகளுக்கும் பெட்டிகளில் மருந்துகளும் கடுதாசி இன்னும் பல சாமான்களும் ஏற்றிக்கொண்டுபோய்க் கொடுப்பதற்காக ஒப்பந்தம்செய்யப் பிரியப்படுவோர்களிடமிருந்து 1908 ம் ஞு மார்கழி 29 ந் தேதி செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணி வரைக்கும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் அனுப்பும் உறையின்மேல் "சாமான்கள் ஏற்றிக்கொண்டுபோய்க் கொடுப்பதற்காக ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுத வேண்டும்.

| இடங்களின் பெயர். | | கிட்டிய றெயில் ஸ்டேஷனிலிருந்து உள்ள தூரம் மைல். | |
|---|---|---|---|
| வட்டுக்கோட்டை | ... | 7 | |
| நெடுந்தீவு | ... | 29 | |
| ஊர்காவற்றுறை | ... | 15 | |
| மன்னார் | ... | 65 | |
| பல்லவராயகாடு | ... | 35 | |
| பூநகரி | ... | 20 | |
| புத்தூர் | ... | 9¼ | |
| புங்குடுதீவு | ... | 25 | |
| மாந்தோட்டை | ... | 73 | சாமான்களை முதல் மன்னாருக்குக் கொண்டுபோய் திரும்ப ஏற்றி அனுப்ப வேண்டும். |
| மறிச்சுக்கட்டி | ... | 98 | |
| பேசாலை | ... | 75 | |
| சிலாவத்துறை | ... | 75 | |
| தலைமன்னார் | ... | 83 | |
| வங்காலை | ... | 71 | |
| விடத்தல்தீவு | ... | 53 | |

2. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர், (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும், அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும.

4. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழு[illegible]

யனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் பிரதான சிவில்மெடிக்கல் ஆபிசரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா.

5. ஒவ்வொரு ஒப்பந்தக் கேள்விக்காரரும் கேள்விக்கடுதாசியைப் பெற்றுக்கொள்ளும்பொழுது முற்பணமாக ரூபா 25 கட்டிப்போடவேண்டியது. கொந்திருத்துக் கேள்விகளை எழுதி யனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினல், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். கொந்திருத்து ஒப்பந்தம் தீர்த்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும். முற்பணம் திறைசேரியில் அல்லது கச்சேரியில் கட்டி றிசீற்றை ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி கொடுக்கும் உத்தியோகத்தரிடம் கொடுக்கவேண்டும்.

6. கொந்திருத்து ஏற்றகாலம், ஒப்பந்தம் சரியாய் நடைபெறுதற்குப் பிணையாய் வருவோமென்று இரண்டு போதிய ஆட்கள் எழுதிக் கையொப்பமிட்ட ஒரு தபால் ஒவ்வொரு கேள்விக் கடுதாசியுடனும் அனுப்பவேண்டும். இந்த இரண்டு பேருடைய மேல்விலாசமும் அந்தத் தபாலில் காட்டவேண்டும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் கொந்திருத்தைச் சரியாய் நடப்பிக்கிறதற்காக பணப்பிணை ரூபா 100 கொடுக்கவேண்டும். இந்தப் பணப்பிணை கொந்திருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று அறிவித்த பதினாலு நாட்களுக்குள் கொடுத்துப்போட வேண்டும்.

8. ஆராகுதல் கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தில் பிழைகள் திருத்தினல் அப்பிழைதிருத்தங்கள் கேள்விப்பத்திரக்காரனின் கையொப்பம் பெற்றிருக்கவேண்டும், அல்லாவிடில் கேள்விப்பத்திரம் சரியல்லதென்று தள்ளப்படும்.

9. இதைக்குறித்து இன்னும் விவரங்கள் அறியவேண்டியதானல் பிரதான சிவில் மெடிக்கல் ஒபிசரிடம் அறிந்துகொள்ளலாம்.

10. ஒப்பந்தக்கேள்விகளில் ஒன்றை அல்லது முழுமையையும் தள்ளும் உரித்தை வைத்திருப்பதுமல்லாமல், அவைகளில் ஏதாகுதல் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கொவர்ணமேந்தாருக்கு உண்டு.

(கையொப்பம்) சி. றீ. கிறிவ்வின்,
பிரதான சிவில் மெடிகல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1908 ம் ஆ மார்கழி மீ 15 ந் உ.

---

[Tender for transporting Salt into Kalpitiya Stores.]

"உப்பு ஏற்றமதிபண்ணி கொவற்ணமேந்தின் கற்பிட்டி குதங்களில் நிறுத்துக் கொடுக்கிறதற்கென்று" மேல்உரையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விரும்புமுன்னவர்களிடமிருந்து புத்தளம் உதவிக் கொவற்ணமேந்து ஏசன்றுத்துரையவர்களால் 1908 ம் ஆண்டு மார்கழிமாதம் 30 ந் தேதி மத்தியானம் வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அஃதாவது :—

கரைத்தீவு உப்பளங்களில் 1908 ம் ஆண்டு பெரும்போகம் உப்பு செய்கைபண்ணிச் சேர்த்துவைக்கப்பட்டிருக்கும் எல்லா உப்பையும் அவ்விடத்திலிருந்து நிறுத்து ஏற்றுமதிபண்ணி கற்பிட்டி உப்புக்குதங்களுக்குக் கொண்டுவந்து நிறுத்துக் குதங்களில் போட்டுக்கொடுக்கும் பணிவிடை.

கேள்விக்காரர் இதன் பின்னுற் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கக்கடவர்கள் :—

1. கரைத்தீவில் நின்று உப்பை சாக்குகளில் நிறைத்து அவைகளின் வாயை ஒன்றாய் நெருக்கிக் கட்டி கற்பிட்டி குதங்களுக்குக் கொண்டுவந்து நிறுத்துக் குதங்களில் போட்டுக்கொடுக்க 1,000 அந்தர் உப்புக்கு என்ன வீதமென்று விபரித்துக் காட்டியிருக்கவேண்டியது.

2. கேள்விக்காரர் நாள் ஒன்றுக்கு 1,000 அந்தர் உப்புக் கொண்டுவந்து நிறுத்து ஒப்புக்கொடுக்க ஆயித்தமாயிருக்கவேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்வி கேட்கமுதல் கச்சேரியில் ரூபாய் 20 ஒடுக்கவேண்டும். அவ்விதமே காசு கட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கொந்திருத்தைச் சரியாக நடப்பிக்கிறதற்கு 500 ரூபாய்கொண்ட சடுதிப்புப்பெற்ற பிணைகொடுக்க அல்லது பொருத்த உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினல், இந்தக் கட்டின பணம் கொவற்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும். பறிமுதலாக்கப்படாத கட்டின பணம் கேள்விக்காரருக்குத் திரும்பக் கொடுக்கப்படும்.

4 கொந்திசை அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்விக்காரன் தனக்குப் பதிலாக புத்தளத்தில் ஒரு பெயர்வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

5. இந்தக் கொந்திருத்துச் சரியாக நடைபெறுகிறதற்காகப் பிணைக்கு ஏற்படுகிறதாகிய இரண்டு போதிய ஆட்களால் கையொப்பமிடப்பட்டு அவர்களின் மேல்விலாசமும் எழுதப்பட்ட கடிதம் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் அனுத்திருக்கவேண்டியது.

6. கேள்வியின் வீதங்களையிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள்பண்ணினல் அந்த இடத்தில் கேள்விக்காரனின் கையொப்ப அடையாளமிடப்பட்டிருக்க வேண்டியது.

7. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி யொன்று கொழும்பிலிருக்கும் அரசிறைவருமான தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி கொவற்ணமேந்து ஏசன்றுத்துரையவர்களுக்கு அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தபால் வழியாக அனுப்பவேண்டும்.

8. கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் தினம் அன்று ஏதும் தேவையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்வதற்காகக் கேள்விக்காரர் கச்சேரியில் சமுகமாயிருக்கவேண்டும்.

9. மேலதிகமான விளம்பரங்களை உப்புத்துரையிடம் கேட்டறிந்துகொள்ளலாம். 1909 ம் ஆ ஏறக்குறைய பங்குனிமாதம் 1 ந் திகதி வேலை துவக்கம் பண்ணவேண்டும்.

ஆ. சி. ஒல்நட்,
புத்தளம் கச்சேரி, உதவி அரசாட்சி ஏசன்று.

1908 ம் ஆ மார்கழி மீ 10 ந் உ.

---

[Supreme Court Criminal Sessions at Colombo.]

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் சிலாபம் புத்தளம் டிஸ்திறிக்குகளைச்சேர்ந்த கிறிமினல் வழக்குவிசாரணை, 1909 ம் ஆண்டு தைமீ 11 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்

பிஸ்கால் கந்தோர்,
1908 ம் ஆ மார்கழி மீ 17 ந் உ.

சி. வி. திபேரா
பிஸ்காலுக்காக

[Supreme Court Criminal Sessions at Kurunegala].

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங்கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: குருநாக்கல் நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங்கோட்டாரால் குருநாக்கல் டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1909 ம் ஆண்டு தைமீ 18 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,

பிஸ்கால் கந்தோர், சி. வி. டிபெரா,
1908 ம் ஹூ மார்கழிமீ 17 ந் உ. பிஸ்கால்டிக்காக.

---

[Supreme Court Criminal Sessions at Kurunegala.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீம் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: குருநாக்கல் நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீம் கோட்டாரால் கேகல்லை டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1909 ம் ஆண்டு ஜனவரிமாதம் 18 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
ஆர். பி. எல்லிங்ஸ்,
இரத்தினபுரி பிஸ்கால் கந்தோர், பிஸ்கால்.
1908 ம் ஹூ மார்கழிமீ 17 ந உ.

---

## UNOFFICIAL ANNOUNCEMENTS.

தொழிலுக்கேற்பட்டவர்களின் அறிவித்தல்கள்.

[J. W. Wickremasinghe.]

மத்திய மாகாணம் வெரவர்ம்பர உவலால என்னும் கிராமத்திலும், தற்போது கொழும்பில் வசிக்கும் ஜேம்ஸ் உவால்ற்றர் விக்கிரமசிங்க ஆகிய நான் 1907 ம் ஆண்டின் முதலாம் கட்டளைச்சட்டத்தின் 1/B என்னும் செடியூல் செக்செனின்படி, கண்டி டிஸ்ட்றிக்கில் இங்கிலிஸ் பிரசித்த நொத்தாரிஸ் வேலை பார்ப்பதற்கு மூன்று மாசத்தின்பின் பறவு கந்தோரின் தலைவரிடம் உத்தரவுகேட்பேன் என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

ஜே. உ. விக்கிரமசிங்க.

19 ம் றெம்பில் றேட் கொழும்பு
1908 ம் ஆ டிசெம்பர்மீ 11 ந் உ.